DEPOSITON OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.171/2019 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW5 |
| | { Prosecution |
| | { |

| | |
|---|---|
| Name | : நவின்சங்கர் |
| Father's Name | :--- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2024.

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 15 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.5 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

<u>முதல் விசாரணை</u>

நான் குள்ள மூப்பன்காட்டில் குடியிருக்கிறேன். நான் தற்போது பெங்களூரில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 என் அப்பா, அ.சா.3 என் அம்மா, அ.சா.4 என் அக்கா, அ.சா.2 யை தெரியும். 1, 21, 22 எதிரிகளை தெரியும். என் தாத்தா பெயர் சடையன், என் பாட்டி பெயர் பழனியம்மாள். என் தாத்தா சிமெண்ட் தொழிற்சாலையில் பணிபுரிந்தார். அது போக நீர் ஊற்று சோதிக்கும் வேலையும் செய்து வந்தார். அந்த சமயத்தில் 1981 ல் மூலப்பாதையில் 4.58 செண்ட் நிலம் கிரையம் வாங்கினார். அவர்களுக்கு முருகேசன், சின்னுசாமி ஆகியோர்கள் மகன்கள். இருவருக்கும் திருமணமாகிவிட்டது. 1999 ல் என் சித்தப்பா ஒரு சாலை விபத்தில் இறந்துவிட்டார். அதன் பிறகு சித்தப்பா மனைவி பேபி, என் பாட்டி பழனியம்மாள்

தங்களுக்கு சொத்தை பிரித்து கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு என் தாத்தா பேத்திகளுக்கு உயில் எழுதி வைப்பதாகவும் தற்போது சொத்து கொடுக்க முடியாது என்றும் சொல்லிவிட்டார். அதன் பிறகு 2000 ஆண்டிலும், 2006 லும் அவருடைய சொத்துக்களை என் அப்பா பெயருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துவிட்டார். அதனால் 21, 22 எதிரிகள் 1 ம் எதிரியை அனுகி உள்ளார்கள். அதனால் 2007 ஆண்டு நீர் சோதிக்க வேண்டும் என்று சொல்லி அவரை கடத்தி கொண்டு சென்றுவிட்டார்கள். அப்போது அவரை மிரட்டி 2006 ல் அவர் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்து விட்டு 2, 3 எதிரிகள் பெயரில் கிரைய பத்திரம் எழுதி வாங்கி கொண்டார்கள். அப்போது என் தாத்தா 1 வாரம் கழித்து வீட்டிற்கு வந்து விட்டார். அதன் பிறகு நான் 2009 ல் கல்லூரியில் படித்து கொண்டிருந்தேன். 2009 நவம்பர் மாதத்தில் ஒரு நாள் 2 நபர்கள் என் கல்லூரிக்கு வந்து நிலம் கிரையம் செய்ய வேண்டும் என்றும் உன் கையெழுத்து வேண்டும் என்றும் சொல்லி மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்கள். அவர்கள் பெயர் நினைவு இல்லை. நான் அங்கு சென்ற போது என் அப்பா, அம்மா, அக்கா, 21, 22 எதிரிகள் மற்றும் சிலரும் இருந்தார்கள். அப்போது 1 ம் எதிரி உங்கள் நிலத்தை எழுதி கொடுப்பதற்காக கையெழுத்து போடுமாறு கேட்டார். அதன் படி நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்தேன். அதன் பிறகு நான் கல்லூரிக்கு சென்றுவிட்டேன். மீண்டும் மறுநாள் நான் கல்லூரிக்கு சென்றுவிட்டு மாலை வீட்டிற்கு வந்து பார்த்த போது அங்கிருந்த ஓட்டு வீடு, மாட்டு கொட்டகை, தார்சு வீடு, தென்னை மரங்கள், ஆகியவற்றை இடித்து தரைமட்டம் ஆக்கப்பட்டிருந்தது. அதை பார்த்து விட்டு நான் அப்பாவிடம் அது பற்றி கேட்டேன். அதற்கு என் அப்பா என்னிடம் 1 ம் எதிரியும் அவரது கூட்டாளிகளும் வந்து இடத்தை நிரவி விட்டார்கள் என்று சொன்னார். அதன் பிறகு நாங்கள் குள்ள மூப்பன்காட்டில் குடியிருந்து வருகிறோம். அதன் பிறகு 2011 ல் என் அப்பா எதிரிகள் மீது நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்தார். அப்புகார் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-நவின்சங்கர்

Sd/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.